Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, NOVEMBER 23, 2023

வியாழக்கிழமை நவம்பர் 23, 2023 | ஒளி: 09 கதிர் 134 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# நிஷாந்தவுக்கு

## இரு வாரங்கள் தடை



பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (21) ஒழுக்கவீனமாக நடந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த இரண்டு வாரங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள தடை விதிப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

தொடர்ச்சி P2

# "எனது மக்கள், எனது மூச்சு".



"எனது மக்கள்" என்பதே எனது மூச்சு. அந்த வகையில் ஏழு எழுத்துக்களில் தான் எனது மூச்சு இருக்கின்றது. ஆனால், ஏனைய தமிழ்த் தேசியம் சப்புகின்ற சில அரசியல்வாதிகள் என்னைவிட எமது மக்களுக்கு அரைவாசி முன்னிலையிலேயே இருக்கின்றனர். அதாவது "ஏழரை"களாக இருக்கின்றனர் என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### வித்தியா கொலை விவகாரம்:

# நீதிமன்றத்துக்கு கல் வீசிய சம்பவ வழக்கிலிருந்து நீதிபதி விலகினார்

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாண நீதிமன்ற கட்டட தொகுதிக்கு கல் வீசி சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளில் இருந்து தான் விலகி கொள்வதாக யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



### சித்தங்கேணி அலெக்ஸ் மரணம்:

# சிறைக்குச் சென்று நீதவான் விசாரணை

■ எம்.றொசாந்த்

வட்டுக்கோட்டை இளைஞனான நாகராசா அலெக்ஸின் படுகொலை தொடர்பில் யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் சிறைச்சாலைக்கு நேரில் சென்று வாக்கு மூலங்களை பெற்றுக்கொண்டுள்ளார்.

அதேவேளை, உயிரிழந்த இளைஞனுடன் கைது செய்யப்பட்ட மற்றைய இளைஞனிடமும் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக வெள்ளிக்கிழமை (24) மன்றில் முன்னிலையாகுமாறு இளைஞனுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சித்தங்கேணி பகுதியை சேர்ந்த 25 வயதான நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் பொலிஸாரின் சித்திரவதை காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை (19) உயிரிழந்துள்ளார்.

இளைஞனின் உயிரிழப்பு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் இடம்பெற்றமையால்,

தொடர்ச்சி P2



# "தேர்தல்கள் நடக்கும்"

## கிரிக்கெட்டை பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பு

பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தல்கள் ஒத்திவைக்கப்படாது எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அந்த இரண்டு தேர்தல்களும் அடுத்த வருடம் நடைபெறும். அதன்பின்னர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் நடைபெறும் என்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எம்.பி.க்கள் தமது தொகுதிகளுக்கு அடுத்த ஆண்டு செல்ல வேண்டும். அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள வேண்டும். அவற்றுக்கிடையில் இங்கு சிக்கிக் கொண்டிருக்க முடியாது. முதல் ஒரு மணிநேரத்தின் பின்னர் பிரதான பணிகளை ஆரம்பிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இரு குழுக்களுக்கு இடையிலான மோதல் காரணமாக இந்நாட்டின் கிரிக்கெட் சரிவை சந்தித்துள்ளது. எனவே அரசியல் தலையீடு இல்லாமல் கிரிக்கெட்டை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவரையும் சார்ந்துள்ளதென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# "மெதமுலன சம்பிரதாயம் இங்கு இல்லை"



பாராளுமன்றத்தில் வெஸ்ட்மின்ஸ்டர் சம்பிரதாய முறையை ஒத்த முறை மட்டுமே உள்ளது. மெதமுலன சம்பிரதாயம் இங்கு இல்லை. ஆனால் அதனை கொண்டுவர மறைமுக சக்தி ஒன்று செயற்படுகின்றது என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரான எனது பாதுகாப்பை சபையில் உங்கள்

தொடர்ச்சி P2



# 10ஆம் தரத்தில் சா/த பரீட்சை

தற்போது 11ஆம் தரத்தில் நடத்தப்படும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை 10ஆம் தரத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில், புதன்கிழமை (22) வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் சுயாதீன எதிரணி எம்.பி.யான மொகமட் முஸம்மில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2


### கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி:

# விசேட ஸ்கேன் மூலம் வெள்ளியன்று ஆராய்வு

■ சண்முகம் தவசீலன்

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி எவ்வளவு தூரம் வியாபித்து இருக்கின்றது என்பதனை அறிய, விஷேட ஸ்கேன் இயந்திரம் மூலம் எதிர்வரும் 24 சோதனை செய்யப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட விஷேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது இரண்டாவது நாளாக, செவ்வாய்க்கிழமை



(21) இடம்பெற்று அகழ்வு பணி நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்,

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கொக்குதொடுவாய் மனிதப் புதைகுழி இரண்டாவது கட்ட அகழ்வுப்பணி இடம் பெறுகிறது. இரு மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. அந்த எலும்புக்கூட்டு உடற்பகுதியில் இருந்து துப்பாக்கி சன்னங்கள், குண்டு சிதறல்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் இலக்க தகடு ஆகியன எடுக்கப்பட்டன.

இலக்க தகடுகள் தொடர்பான விடயங்கள் பின்னர் அறியத்தரப்படும். தொடர்ந்து இப்பணி முன்னெடுக்கப்படும். இந்த மனித புதைகுழியானது

தொடர்ச்சி P2



# "ஜனாதிபதிகளை தடுக்க வேண்டும்

முன்னாள் ஜனாதிபதிகள் பாராளுமன்றத்திற்கு மீண்டும் வருவதை தடுக்க சட்டம் கொண்டு வர வேண்டும் என பொதுஜன பெரமுனவின் குருநாகல் மாவட்ட உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இது தவறான முன்னுதாரணமாகும் என்றார்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜயவர்தனவும் சந்திரிகா குமாரதுங்கவும் அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தாததற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும்,

தொடர்ச்சி P2




# ஜனாதிபதி கலைப்பார்

2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பாராளுமன்றம் ஜனாதிபதியால் கலைக்கப்படும் என நம்புவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குறித்த 5 வருடங்கள் நிறைவடையும் வரை பாராளுமன்றம் கலைக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி மொட்டுவிடம் வாக்குறுதியளித்துள்ள

தொடர்ச்சி P2



# பேராதனை மண்சரிவில் சிக்கிய முதியவர் மரணம்

■ ஷேன் செனவிரத்ன

பேராதனை நகரில், செவ்வாய்க்கிழமை (21) இரவு ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக கண்டி மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் இந்திக்க ரணவீர தெரிவித்துள்ளார்.

நாயகிய பிரதேசத்தில் தொலைபேசி சேவை நிலையத்தை நடத்தி வந்த திருமணமாகாத அனுர ஜயவீர (வயது 68) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டு ள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். 04 வர்த்தக நிலையங்கள் முழுமையாக சேதமடைந்துள்ளன.

இந்த மண்சரிவினால் கொழும்பு - கண்டி பிரதான வீதியின் ஒரு ஒழுங்கையினூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# லஞ்ச் ஷீட்டை சாப்பிட வைத்த அதிபர்

## மாணவர்கள் இருவர் பாதிப்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

மதிய உணவை லஞ்ச் ஷீட் சுற்றிக்கொண்டு வந்த மாணவர்களில் ஏழுபேரை பிடித்த பாடசாலையின் அதிபரொருவர், அந்த லஞ்ச் ஷீட்டை உட்கொள்ளுமாறு கூறியமையால், அதனை உட்கொண்ட இரண்டு மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம், நாவலப்பிட்டி வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ்



இயங்கும் கல்லூரி ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

பாதிப்பு உள்ளான மாணவர்கள் இருவரும் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “எனது மக்கள், எனது மூச்சு”...

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி, பிரதமருக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான குழ்நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், பொருளாதார ரீதியில் நலிவடைந்திருந்த நாம் நாடு இன்று மெல்லென நிமிர்ந்து வருகிறது. தாகமெடுத்த கொக்குக்கு தாம்பாளத்தில் தண்ணீர் வழங்காமல் கூசாக்களில் நீர் இறைத்து தாகம் தீர்க்க எந்த நாடு வந்தாலும் நாம் அதை வரவேற்போம்,. ஆனாலும்,. எமது தேசம், எமது மக்கள், எமது உரிமை, எமது மீள் எழுச்சி,. எமது நாடு, எமது இறைமை, எமது அயலுலகம்,.. இவைகளை எம் நெஞ்சில் நிறுத்தியே சர்வதேச உறவுகளை நாம் இன்னமும் கொண்டிருக்கிறோம்.எமது அயலுலக உறவுக்கும் எமக்கும் இடையில் சிண்டு முடிந்து விடும் அரசியல் சூழ்ச்சிகளும் இங்கு அரங்கேறி வருகின்றன, ஆனாலும் அந்த கனவுகள் ஒரு போதும் நிறைவேறாது.

சக தமிழ தரப்பினர் பலரும் எதிர்ப்பரசியல் நடத்திக் கொக்கரிப்பதற்காகவே தேர்தலில் போட்டியிடுகிறார்கள். இத்தகைய சாபக்கேடுதான் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் தீராப் பிரச்சினையாக நீடித்து வரவும் காரணமாக இருந்து வருகிறது. ‘கொன்றால் பாவம், தின்றால் போச்சி’ என்ற நிலைப்பாடு, இதர தமிழ்க் கட்சிகளுக்கு இருக்கலாம். ஆனால், நான் அந்த நிலைப்பாட்டில் இல்லை என்பதை அனைவரும் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்

‘எனது மக்கள்’ என்பதே எனது மூச்சு. அந்த வகையில் ஏழு எழுத்துக்களில் தான் எனது மூச்சு இருக்கின்றது. இது எனது மக்களுக்கானது. ஆனால், ஏனைய தமிழ்த் தேசியம் சப்புகின்ற சில அரசியல்வாதிகள் என்னைவிட எமது மக்களுக்கு அரைவாசி முன்னிலையிலேயே இருக்கின்றனர். அதாவது ‘‘ஏழரை’’களாக இருக்கின்றனர். அதனை மேலும் உறுதிப்படுத்துகின்ற வகையிலேயே அவர்களது செயற்பாடுகளும் இருந்து வருகின்றன என்றார்.

# சிறைக்குச் சென்று நீதவான் விசாரணை

இளைஞனின் உயிரிழப்பு தொடர்பிலான விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ ஆனந்தராஜா முன்னிலையில் இடம்பெற்று வருகின்றன.

இளைஞனின் உடற்கூற்று பரிசோதனைகள் திங்கட்கிழமை (20) மதியம் யாழ்.போதனா வைத்தியசாலையில், சட்ட வைத்திய அதிகாரி உ. மயூரதன் மேற்கொண்ட போது, நீதவான் வைத்தியசாலைக்கு நேரில் சென்று சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

தொடர்ந்து சிறைச்சாலைக்கு நேரில் சென்று சிறைச்சாலை அத்தியட்சகர் , உத்தியோகஸ்தர்கள் , உள்ளிட்டவர்களிடம் வாக்கு மூலங்களையும் பெற்றுக்கொண்டார்.

உயிரிழந்த இளைஞனின் குடும்பத்தினர் சார்பில் சிரேஸ்ட சட்டத்தரணி வி.திருக்குமரன், சட்டத்தரணி ரிஷிகேஷவன், மற்றும் சட்டத்தரணி மயூரன் ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உயிரிழந்த இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞன் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் செவ்வாக்கிழமை (21) முற்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்றினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞன் மற்றும் அவரது நண்பரான மற்றைய இளைஞன் ஆகியோர் மீது நகை திருட்டு குற்றச்சாட்டு சுமத்தி வட்டுக்கோட்டை பொலிஸாரினால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது இருவரையும் மன்று விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதை தொடர்ந்து இருவரும் , யாழ்ப்பாண சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையிலே அலெக்ஸ் எனும் இளைஞன் உயிரிழந்தார். மற்றைய இளைஞன் தொடர்ந்து சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த நிலையிலே நீதிமன்றம் அவரை பிணையில் செல்ல செவ்வாய்க்கிழமை (21) அனுமதித்தது.

# லஞ்ச் ஷீட்டை சாப்பிட வைத்த அதிபர்

அந்த கல்லூரியில் 11ஆம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் மதிய உணவை லஞ்ச் ஷீட்டில் சுற்றி, செய்தித்தாளில் சுற்றிக்கொண்டு வந்துள்ளனர்.

அந்த வகுப்பில் 33 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இதில் 07 மாணவர்கள் பகல் உணவுகளை லஞ்ச் ஷீட்டில் சுற்றி, செய்தித்தாள் பக்கங்களால் சுற்றிக் கொண்டு வந்துள்ளனர்.

மதியம் சாப்பிட்டுவிட்டு லஞ்ச் ஷீட் மற்றும் செய்தித்தாள் பக்கங்களை ஏழு மாணவர்களும் தங்களுடைய வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்குத் தயாராகிக்கொண்டிருந்துள்ளனர்.

அப்போது அவ்விடத்திற்கு வந்த அதிபர் அவற்றை வெளியே எடுத்து, சாப்பிடுமாறு கூறியுள்ளார். அவர்கள் அனைவரும் லஞ்ச் ஷீட் மற்றும் பத்திரிக்கைகளைத் தின்றுவிட்டனர்.

லஞ்ச் ஷீட்டில் மற்றும் செய்தித்தாள்களைச் சாப்பிட்ட ஏழு மாணவர்களில் ஒருவர் 21ஆம் திகதியும் மற்றுமொரு மாணவன் 22ஆம் திகதியும் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் பெற்றோரால் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வயிற்று வலி, வாந்தி மற்றும் தொண்டை வலி போன்ற அறிகுறிகளுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மாணவனின் தந்தை, நாவலப்பிட்டி பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் நாவலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுகள் தொடர்பில், அந்தப் பாடசாலையின் அதிபரை தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அம்முயற்சி கைகூடவில்லை என்று கூறப்படுகின்றது.

# “தேர்தல்கள் நடக்கும்”

கிரிக்கெட் தொடர்பிலான பிரச்சினையில் எவரையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் தனக்கு இல்லை என்பதோடு, சித்ரசிறி அறிக்கைக்கமைய புதிய கிரிக்கெட் சட்டமொன்றை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைத் தான் பல தடவைகள் விளக்கியிருந்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஆட்சியாளர்களுக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பு வழங்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். அதற்கான சூழலை நானே உருவாக்கினேன். அதனால் என்னை எதிர்ப்பதில் நியாயமில்லை. நாட்டின் ஜனநாயகத்தையும் வலுப்படுத்தியுள்ளோம். எனவே, வரவு-செலவுத் திட்ட விடயத்திலாவது எமக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி ஒரு சட்டத்தரணி. இதற்கு முன்னர் அவர் வழக்குகளைச் சந்தித்துள்ளார். அவர் நிரபராதி என்றால் விடுவிக்கப்படுவார். அந்த ஜனநாயகத்தை இந்த நாட்டில் உருவாக்கியுள்ளோம். எனவே, நாம் தேர்தலுக்கு அஞ்சவில்லை. அடுத்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல் ஆகிய இரண்டையும் நடத்துவோம். அதன் பின்னர் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடத்தப்படும்.

ஆட்சியமைக்க தேவையான பெரும்பான்மை இருக்குமாயின் ஆட்சியமைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவரிடம் கோரப்படும்.இது தான் எமது நாட்டின் பொதுவான சம்பிரதாயம். ஆனால் நமது எதிர்க்கட்சித் தலைவர் அதைச் செய்யவில்லை. இது பொது நம்பிக்கை மீறலாகும்.இந்த பிரதமர் பதவியை ராஜபக்ஷவினர் எனக்குத் தரவில்லை. எம்.பிக்கள் என்னிடம் வந்து பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தனர். நான் அதனை ஏற்றுக்கொண்டேன். நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு கோரினேன். அதனால் பொது நம்பிக்கை என்னிடத்திலேயே உள்ளது. எனக்கு ஆதரவளியுங்கள் எனக் கேட்டுக்கொண்டார்.

சட்டங்களை இயற்றுவதற்காக இந்த சட்டசபை உள்ளது. நாங்கள் சில சமயங்களில் பணிகளைத் தொடங்க மாட்டோம். நடிப்பதற்காக மக்கள் எங்களுக்குப் பணம் கொடுக்கவில்லை. சட்டங்களை இயற்றுவதற்குத்தான் பணம் செலுத்துகிறார்கள்.

எனவே, பாராளுமன்றத்தில் முதல் ஒரு மணி நேரம் கழித்து நாம் முக்கிய பணிகளுக்குச் செல்ல வேண்டும் என நான் பரிந்துரைக்கிறேன். இது தொடர்பில் அமைச்சரவையிலும் கலந்துரையாடுகிறேன். தற்போது அடுத்த ஆண்டு பல புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இவற்றை இனியும் தள்ளிப் போட முடியாது என்றார்.

# பேராதனை மண்சரிவில் சிக்கிய முதியவர் மரணம்

குறித்த பகுதியில் நிலவும் அபாய நிலைமை காரணமாக அந்த பகுதியை அண்மித்து அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் கட்டடங்களில் இருந்த நபர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதனிடையே, நுவரெலியா - கொழும்பு பிரதான வீதியின் வெலிகல்ல மற்றும் கெலிஓய பகுதிகளுக்கு இடையே மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ளமையால் வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

> **“நாட்டின் பல பகுதிகளிலும் 100 மில்லிமீட்டர் மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. அதன்படி, மத்திய, ஊவா, சப்ரகமுவ, மேல், வடமேல், வட மத்திய மாகாணங்களில் பலத்த மழை பெய்யும் சாத்தியம் காணப்படுவதாகவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சில பிரதேசங்களில் காலை வேளையில் மழை பெய்யலாம் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.**

பலாங்கொடை - சீலகம பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினால், பதுளை - கொழும்பு பிரதான வீதியில் வாகன போக்குவரத்திற்கு தொடர்ந்தும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதனிடையே, நாட்டின் பல பகுதிகளிலும் 100 மில்லிமீட்டர் மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மத்திய, ஊவா, சப்ரகமுவ, மேல், வடமேல், வட மத்திய மாகாணங்களில் பலத்த மழை பெய்யும் சாத்தியம் காணப்படுவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சில பிரதேசங்களில் காலை வேளையில் மழை பெய்யலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அத்துடன், பதுளை, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, மாத்தளை, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் குருணாகல் ஆகிய 9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

# நிஷாந்தவுக்கு..

இந்த அறிவிப்பை, பாராளுமன்றத்தில் சபாநாயகர் புதன்கிழமை (22) விடுத்தார்.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வுகளின் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உரையாற்றிக் கொண்டிருக்கும் போது, அவர் அருகில் வந்த சனத் நிஷாந்த, அவரது கையில் இருந்த கோப்புக்களைப் பறித்துச் சென்றார். இந்நிலையிலேயே அவருக்கு இரண்டு வாரங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது.

# 10ஆம் தரத்தில் சா/த பரீட்சை

மாணவர்களின் கல்வி கற்பதற்கான வயதைக் கருத்திற்கொண்டு அவர்கள் 15 வயதாகும்போது, கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் வகையில் தற்போது 11ஆம் தரத்தில் நடத்தப்படும் கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சையை 10ஆம் தரத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அவ்வாறு சாதாரண தர பரீட்சையை எழுதும்போது மாணவர்கள் தமது 17 வயதில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

அதேவேளை, நான்கு வயதை நிறைவு செய்யும் சகல சிறார்களும் ஆரம்பக் கல்விக்காக பாடசாலையில் அனுமதிக்கப்பட வேண்டும் அது சம்பந்தமான யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளேன் என்றார்.

> **“பொது தராதர சாதாரண தரப் பரீட்சையை 10ஆம் தரத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அவ்வாறு சாதாரண தர பரீட்சையை எழுதும்போது மாணவர்கள் தமது 17 வயதில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற முடியும்**

# ஜனாதிபதி கலைப்பார்

போதிலும் அவரின் வாக்குறுதிகளை நம்ப முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியால் இந்த பாராளுமன்றத்தை முன்னெடுக்க முடியாது எனவும் நளின் பண்டார குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்து செய்த தவறுக்காக உயர் நீதிமன்றத்தினால் குற்றம் சுமத்தப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ச ஆகியோரின் செலவுகளை அகற்ற வேண்டும் என்றும் மக்களின் வரிப்பணத்தில் அவர்களுக்கு உணவளிக்கக் கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

> **“நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்து செய்த தவறுக்காக குற்றம் சுமத்தப்பட்ட மஹிந்த மற்றும் கோட்டாபய ஆகியோரின் செலவுகளை அகற்ற வேண்டும். மக்களின் வரிப்பணத்தில் அவர்களுக்கு உணவளிக்கக் கூடாது**

# விசேட ஸ்கேன் மூலம் வெள்ளியன்று ஆராய்வு

எவ்வளவு தூரம் வியாபித்து இருக்கின்றது. எத்தனை படைகளில் எலும்புக்கூடுகள் அடுக்கப்பட்டிருக்கின்றன எனும் தகவலை அறிவதற்காக விஷேட ஸ்கேன் சோதனை எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

களனி பல்கலைக்கழக தொல்பொருள் பீடத்தினர் குறித்த ஸ்கேன் இயந்திரத்தினை கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# “ஜனாதிபதிகளை தடுக்க வேண்டும்

அவர்கள் மீண்டும் பாராளுமன்றத்திற்கு வரவில்லை என்றும் தமது மானத்தைக் காப்பாற்றியதாகவும் ஜயசேகர தெரிவித்தார்.

அடுத்த வருட பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்க ரணில் விக்ரமசிங்கவும் பாராளுமன்றத்திற்கு வருவாரா என்பது தெரியவில்லை எனவும் தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

# நீதிமன்றத்துக்கு கல் வீசிய சம்பவ வழக்கிலிருந்து நீதிபதி விலகினார்

2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட நிலையில், அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்து 21ஆம் திகதி யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், நீதிமன்ற சூழலில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், பலரும் கூடி இருந்தனர்.

இந்நிலையில், போராட்டம் வன்முறையாக மாறி நீதிமன்ற கட்டட தொகுதி மீது கல்வீச்சு இடம்பெற்றது.

தொடர்ந்து நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சட்டத்தரணிகளின் வாகனங்கள், சிறைச்சாலை வாகனம், நீதிமன்றுக்கு அருகில் இருக்கும் சுப்பிரமணிய பூங்கா உடைமைகள், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக இருந்த பொலிஸ் காவலரண் என்பவை சேதமாக்கப்பட்டன.

இவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சுமார் 300க்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்து, நீதிமன்ற கட்டட தொகுதிக்குக் கல் வீசியமை, சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தமை, பொலிஸ் நிலையம் மீது கல்வீசியமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்கு தொடர்ந்து சந்தேகநபர்களை மன்றில் முற்படுத்தி, வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் நீதிமன்ற கட்டட தொகுதிக்கு கல்வீசிய வழக்கு விசாரணை சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ். மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டதை அடுத்து, மேல் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றுவந்தன.

குறித்த வழக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதியாக தற்போது கடமையேற்று இருக்கும் நீதிபதி டீ. சூசைதாசன் முன்னிலையில் எடுத்து கொள்ளப்பட்ட போது, தனது தனிப்பட்ட காரணங்களால் இந்த வழக்கு விசாரணைகளில் இருந்து தான் விலகி கொள்வதாக தெரிவித்து விலகி கொண்டுள்ளார்.

இது குறித்த நீதிமன்ற பதிவாளரால், பிரதம நீதியரசருக்கு அறிவிக்கப்பட்டு, புதிய நீதிபதி ஒருவர் குறித்த வழக்கு விசாரணைகளை முன்னெடுப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளை யாழ். நீதவான் நீதிமன்றில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# “மெதமுலன சம்பிரதாயம் இங்கு இல்லை”

படைக்கல சேவிதர்களினால் உறுதிப்படுத்த முடியாது என்றால் அதனை எனக்கு கூறுங்கள், நான் எனது பாதுகாப்பைப் பார்த்துக்கொள்கிறேன். அதற்கான ஆளுமை எனக்குள்ளது என்றார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (21) ஏற்பட்ட நிலைமை தொடர்பில் புதன்கிழமை (22) பாராளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

பொருளாதாரத்தை வங்குரோத்தாக்கியவர்கள் யார் என்று மக்கள் கேட்கும் போதும், பாராளுமன்றம் இதற்காக ஒரு தெரிவுக் குழுவைக் கூட நியமித்துள்ள வேளையிலும், சமீபத்தில் இலங்கை உயர் நீதிமன்றம் ஒரு வரலாற்றுத் தீர்ப்பை வழங்கி மஹிந்த ராஜபக்ஷ கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ பீ.பி.ஜயசுந்தர, அஜித் நிவார்ட் கப்ரால், எஸ்.ஆர்.ஆடிகல, டபிள்யூ.டி.லக்ஷ்மன் மற்றும் நிதிச் சபை நாட்டை வங்குரோத்தாக்கியவர்கள் என்று அறிவித்து பதில் அளித்துள்ளது.

நாட்டை வங்குரோத்தாக்கியவர்கள் என நீதிமன்றம் தீர்ப்பளித்தாலும் அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் குறித்த தரப்பினர் சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நாட்டு மக்கள் பல தலைமுறைகளுக்கு இந்த இழப்பீட்டை ஈடு கட்ட வேண்டியுள்ளது.

எனவே, இவர்களோடு தொடர்பான பிரச்சினையை செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைத்தபோது, இதற்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலர் இடையூறு செய்தனர். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று நிலையியற் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. சபா பீடத்தில் ஆளுங்கட்சியில் இருந்து எதிர்க்கட்சியை நோக்கி வந்து ரவுடித்தனமாக நடந்து கொண்ட சகல எம்.பி.க்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர் இடமாற்றத்தில்

# “பாரிய அநீதி”



ஆசிரியர் இடமாற்றத்தின் போது தொழிற்சங்க உறுப்பினர்களாக இல்லாத ஆசிரியர்கள் பாரிய அநீதியை எதிர்கொள்வதாக அரச தரப்பு கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றம் புதன்கிழமை (22) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்று தொடர்பில் கருத்துரைக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ஆசிரியர் இடமாற்ற சபைகளில் ஆசிரியர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. தொழிற்சங்கங்கள் ஆசிரியர் இடமாற்ற சபைகளில் ஈடுபட்டு தங்கள் உறுப்பினர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. உறுப்பினர்களாக இல்லாதவர்களுக்கு இங்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்றார்.

ஆசிரியர் இடமாறுதல் சபைகள் ஒன்று கூடி ஆசிரியர் இடமாற்றம் செய்யப் பட்டியலை உருவாக்கினால் அது தவறு.

இது பல வலயங்களில் நடக்கும் ஒன்று. எனவே, இது தொடர்பாகப் பணி ஒழுங்குமுறை வகுத்து, சுற்றறிக்கை தயாரித்து, மாகாணசபைக்கு அனுப்பினால் நல்லது.

மாகாண மட்டத்தில் புதிய பணி ஒழுங்குமுறையும் சுற்றறிக்கையும் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டும் என்றார்.



## உத்தரதேவிக்கு யானை பலி

■ மு.தமிழ்ச்செல்வன்கொ

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி பயணித்த உத்தரதேவி புகையிரதத்துடன் மோதுண்டு யானை, உயிரிழந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை (21) பதிவாகியுள்ளது. முல்லைத்தீவு - முறிகண்டி புகையிரத நிலையத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி சுமார் 500 மீற்றர் தொலைவில் யானைகள் கடக்கும் இடம் என்ற எச்சரிக்கை அறிவித்தல் காணப்படுகின்ற பகுதியிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அலெக்ஸின் மரணம்;

## “ஜெனிவாவில் முழங்கும்”

■ பு.கஜிந்தன்

யாழ். வட்டுகோட்டை அலெக்ஸின் மரணத்துக்கு காரணமாக இருந்த பொலிஸாருக்கு உடனடியாக தண்டனை வழங்காவிட்டால், இவ்விடயத்தை ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அறியப்படுத்தி, குற்றவாளிகளுக்கு எதிராக உரிய நடடிவக்கைகளை எடுப்போம் என ஐரோப்பா வாழ் சித்தங்கேணி மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த இளைஞனின் மரணம் குறித்தான கண்டன அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பொலிஸாரின் சித்திரவதையால் பலியான எங்கள் உயிர்த் தோழன் அலெக்ஸின் தீர்ப்பு என்ன? கொலை செய்த பொலிஸாரின் இடமாற்றம் இவனின் உயிருக்கு ஈடாகுமா? சிறுநீரகம் செயலிழக்கும் நிலை வரும் வரை கொடூர தாக்குதலையும், கண்மூடித்தனமான சித்திரவதையையும் செய்த பொலிஸாரின் அநீதியைத் தட்டிக் கேட்க எவரும் இல்லையா?

கொலை செய்யப்பட்ட எங்கள் ஊரைச் சேர்ந்த அலெக்ஸின் உயிரை மீட்டுத் தரமுடியுமா? கண்மூடித்தனமாக சித்திரவதை செய்த பொலிஸாருக்கு என்ன தண்டனை? கொலையுண்ட எங்கள் ஊரைச் சேர்ந்த அலெக்ஸின் வாக்குமூலத்தைக் கேட்ட பின்னரும் எதற்காக இந்த மௌனம்?

சட்டத்தை நிலை நாட்ட முடியாத இது என்ன நாடா? இல்லை சுடுகாடா? என்றும் வினவியுள்ளது.

அலெக்சின் மரணத்திற்குக் காரணமாக இருந்த பொலிஸாருக்கு உடனடியாக உரிய தண்டனை கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்காது போனால் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவிற்கு இவ்விடயத்தை உடனடியாக அறியப்படுத்தி, மேலதிக நடடிவக்கைகளை துரிதப்படுத்தி கொலையாளிகளுக்கு எதிராக உரிய நடடிவக்கைகளை எடுப்போம் என்பதை உறுதியுடன் அநியத்தருகின்றோம்” எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



## சிறுவன் துஷ்பிரயோகம் இளைஞனுக்கு விளக்கமறியல்

■ ராமு தனராஜா

கடைக்குச் சென்று திரும்பிய 13 வயதான சிறுவனை, வாகனம் பழுது பார்க்கும் நிலையத்துக்கு அழைத்த, அங்கு வேலைச்செய்யும் 27 வயதான நபர், அச்சிறுவனுக்கு மதுவைக் கொடுத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவம் ஒன்று பசறை-கோணக்கலை, காவத்த தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

17ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சந்தேக நபரை கைதுசெய்து அவரை பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார் என்று பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை- கோணக்கலை, காவத்தை தோட்டத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுவன், பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை, பெற்று வருவதாகவும் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு தெரிவித்துள்ளது.



## மின்சார வேலியில் கொம்பன் உயிரிழப்பு

■ கீதாஞ்சன்

முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான் பெரிய சாளம்பன் கிராமத்தில் வயல் நிலத்துக்கான பாதுகாப்புக்கு போடப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்குண்டு கொம்பன் யானை, புதன்கிழமை (22) உயிரிழந்துள்ளது.

மின்சார வேலியினை இணைப்பு செய்த காணியின் உரிமையாளரை பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன், மேலதிக விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகளில் வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், சாளம்பன் கிராமத்தில் காட்டு யானையினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



## ஜனாதிபதி விருது

உயர் அறிவியல் ஆராய்ச்சிக்காக வைத்திய கலாநிதி டி.கோபிசங்கருங்கு ஜனாதிபதி விருது வழங்கப்பட்டது.

Elsevier என்னும் உலகளாவிய பதிப்பகத்தினால். இலங்கையைச் சேர்ந்த ஒருவரால், இங்குள்ள உள்ள ஸ்தாபனத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் ஆராய்ச்சிக் கட்டுரையை, சர்வதேச தரத்திலான சஞ்சிகையில் பிரசுரித்தமை போன்ற விடையங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

elsevier பரிந்துரைத்ததின் பேரில் விஞ்ஞான ஆராய்ச்சிக்கான தேசிய விருது வைத்திய கலாநிதி கோபி சங்கர், பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்ற நிகழ்வில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

பு.கஜிந்தன்





## வெள்ள அனர்த்தத்தை கட்டுப்படுத்த சிரமதானம்

■ பு.கஜிந்தன்

யாழில் பிரதான வாய்க்கால்களில் காணப்படும் பற்றைகளினால் உக்கும், உக்காத பொருட்கள் அடைப்பட்டு வெள்ள நீர், மக்கள் குடியிருப்புகளுக்குள் புகுந்து வருகின்றது.

இதன் காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும், அப்பகுதியில் போக்குவரத்துத்துக்கும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், முறிகண்டி வர்த்தகர் சங்கம், கிராம மட்ட அமைப்புக்கள் பொது மக்களுடன் இணைந்து மாபெரும் சிரமதான பணிகளை புதன்கிழமை (22) ஆரம்பித்துள்ளன.

இதன்போது, பிரதான வாய்க்கால்களில் காணப்பட்ட பற்றைகள் அகற்றப்பட்டு பெரும் தொகையான பிளாஸ்ரிக் போத்தல்களும் அகற்றப்பட்டு பிரதேச சபையினர் ஊடாக வெளியேற்றப்பட்டுள்ளது.



## வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசி தாக்குதல்

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், உடமைகளையுடம் பெற்றோல் ஊற்றி தீ வைத்துள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் செவ்வாய்க்கிழமை (20) இரவு வந்த இருவர், வீட்டின் கதவு, வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த மோட்டார் சைக்கிள் என்பவற்றின் மீது பெற்றோலை ஊற்றி தீ வைத்த பின்னர், வீட்டின் வளவுக்குள் பெற்றோல் குண்டு ஒன்றினை வீசி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## “ஆணிகளை உட்கொண்டேன்”



சவூதி அரேபியாவுக்கு பணிப்பெண்ணாக சென்று பல்வேறு இன்னல்களை அனுபவித்த மத்துகம - நெபட பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான இராமசந்திரன் தர்ஷனி புதன்கிழமை (22) இலங்கை வந்தடைந்தார்.

சவூதி அரேபியாவில் அவர் பணியாற்றிய வீட்டில் துன்புறுத்தல்களுக்கு இலக்கான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சவூதி அரேபியாவிலிருந்து குவைட் வழியாக இலங்கை வந்தடைந்தார்.

பல்வேறு இன்னல்களை அனுபவித்த நிலையிலேயே தான் நாட்டை வந்தடைந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

“என்னை சலவை இயந்திரம் வைக்கப்பட்டிருந்த அறைக்கு அழைத்துச் சென்று தாக்கினார்கள். கீழே தள்ளி என்னைத் தாக்கினார்கள். இரண்டு ஆணிகள் மற்றும் இரும்பு துண்டொன்றைக் கையில் கொடுத்து உட்கொள்ளுமாறு கூறினார்கள். இல்லை என்றால், தங்க நகைகளைத் திருடியதாகத் தெரிவித்து, பொலிஸில் பிடித்துக் கொடுப்பதாகக் கூறினார்கள். நான் ஆணிகளை உட்கொண்டேன். ஒரு ஆணி தொண்டையில் சிக்கியது. எனக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது.” என தெரிவித்துள்ளார்.



## பாடசாலையில் கைவரிசை

■ இரா.யோகேசன்

ஹட்டன் கல்வி வலைத்துக்கு உட்பட்ட வட்டவளை தமிழ் மகா வித்தியாலயத்தில் காரியாலயம் மற்றும் வகுப்பறைகள் உடைக்கப்பட்டுள்ள சம்பவம் புதன்கிழமை (21) பதிவாகியுள்ளது.

இது தொடர்பில் பாடசாலையின் நிர்வாகத்தால் வட்டவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை வட்டவளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோற்றுப் பருக்கையே பதம்

சட்டவாக்க சபையான பாராளுமன்றத்தில் கடந்த இரண்டொரு நாட்கள் இடம்பெற்ற ஒருசில அருவருக்கத்தக்க சம்பவங்களைப் பார்க்கும்போது, இதுவா? சட்டங்களை இயற்றும் சபையெனச் சந்தேகிக்கும் அளவுக்கு, பாராளுமன்றத்தில் ஒருசிலர் நடந்துகொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

இதனை விடவும் பாரதூரமான சம்பவங்கள் இதற்கு முன்னர் இடம்பெற்றன. அவற்றுக்கெல்லாம் எவ்வாறான தண்டனைகள் வழங்கப்பட்டன. என்பது அனைவருக்கும் நன்றாகவே தெரியும். குற்றமிழைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தண்டனைகள் மிகச்சரியாக வழங்கப்பட்டிருக்குமாயின், நிலைமை இந்தளவுக்குச் சென்றிருக்காது.

மக்கள் கலரிகளில் பாடசாலை மாணவர்கள், பார்வையாளர்களாக அமர்ந்திருக்கும் சந்தர்ப்பங்களில், சபைக்குள் மிகமோசமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அப்போதெல்லாம் அக்கிராசனத்தில் இருக்கும் சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தலைவர்கள் இன்றேல் தலைமைத்தாங்கும் உறுப்பினர்கள் சபையைத் தற்காலிகமாக ஒத்திவைப்பர். மாணவர்களை வெளியேற்றுமாறு கட்டளையிடுவர்.

நகங்களை, நகவெட்டியால் அல்லது பிளேடால் வெட்டுவது இன்றேல் பல்லினால் கடித்துத் துப்புவது என்ற மூன்று முறைகளில் எதனை தேர்ந்தெடுத்து ஒருவர் தன் நகங்களை அகற்றுகிறாரோ அந்த செயலினை வைத்தே அவரின் குணத்தினை கூறலாம். அதைப்போலவே சபையிலுள்ள ஒருசிலரின் நடவடிக்கையை அவதானிக்கும் எதிர்கால சந்ததியினரும் இவ்வாறுதான் நடந்துகொள்கின்றனர் என யூகிக்கக்கூடும். அரகலயவின்போது, பாராளுமன்றத்தை சுற்றிவளைத்த 225 பேருக்கு எதிராகவும் குரல்கொடுக்கப்பட்டது. அதிலிருந்து பாடத்தை கற்றுக்கொண்டிருக்கவேண்டும்.

சபைக்குள் ஒவ்வொரு சம்பவங்கள் இடம்பெற்றதன் பின்னர், நிலையியற் கட்டளைகளைத் திருத்தவேண்டுமெனக் கோரிக்கைகளை முன்வைக்கும் தரப்பினர், கடந்தகால சம்பவங்களைப் படிப்பினையாகக் கொண்டும், எதிர்கால நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏற்படப்போகும் ஆபத்துகளை, தூரநோக்கோடும் சிந்தித்து, நிலையியற் கட்டளைகளைத் திருத்தி, எந்தப்பக்கங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், தராசைப் போல் இருந்து நிலையியற் கட்டளைகளை அமுல்படுத்தினால் மட்டுமே சட்டவாக்க சபையின் மீது, மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் திருப்தியும் கொள்வர்.

பாராளுமன்றத்துக்கு செவ்வாய்க்கிழமை (22) வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சபையின் பிரதான நடவடிக்கைகளை ஒருமணி நேரத்துக்குள் மட்டுப்படுத்தி, சட்டங்களை இயற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு யோசனையை முன்வைத்திருந்தார். இங்கு, சட்டவாக்க சபையின் நடவடிக்கைக்குள் நிறைவேற்றதிகாரம் தலையிட்டதாகவே அவதானிக்க முடிகின்றது. ஏனெனில், சபையின் பிரதான நடவடிக்கை, அந்தளவுக்கு மோசமானதாகவே உள்ளது என்பது அவதானிப்பாகும்.

பாராளுமன்றத்தில், விடயதானங்களுடன் தொடர்புடைய வாதப்பிரதிவாதங்களுக்கு அப்பால், ஒருவரைத் தூற்றுதல், கடந்தகால நடவடிக்கைகளை விமர்சித்தல், குடும்ப உறுப்பினர்களை இழுத்துவிடல், இன்றேல் பழைய பல்லவிகளை அப்படியே ஒப்புவித்தல், இவற்றைத் தவிர, புதிய யோசனைகளை ஒருசிலரை தவிர, பெரும்பாலானோர் முன்வைப்பதில்லை என்பதே உண்மையாகும். ஆகையால், "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோற்றுப் பருக்கையே பதம்" என்பதால் ஒவ்வோர் உறுப்பினர்களும் நடந்துகொள்வதே, வாக்கசபைக்கு சிறந்தது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

சுய நலமில்லாமல் வாழ்பவர்களை பலர் சுரண்ட நினைக்கின்றார்கள். உறவுகளை, உதவுபவர்களை எளிதாக ஏமாற்றுபவர்கள், தங்களை தாங்களே சிறுமைப்படுத்துகின்றனர்.

இத்தனை நடந்த பின்னரும் கூட, தாராளமனம் படைத்தோர் தங்களது நல்ல செயல்களை நிறுத்துவதும் இல்லை.

மேலும், பெற்றோரை மதிக்காத பிள்ளைகள், ஆசானை மறந்த மாணவர்கள், கொடுத்தவர்களுக்கே துரோகம் செய்யும் எத்தர்கள் என எராளமான பிரகிருதிகள் எம்மோடு வாழ்ந்தபடியே நடமாடுகின்றனர்.

கோவில் திருவிழாவை மக்கள் கொண்டாடும் போது, அங்கேயும் திருடர் கூட்டம் தங்கள் கைரிசையைக் காட்டுகின்றனர். எப்படி எச்சரிக்கை செய்தாலும் மக்கள் அதனைக் கேட்காமல் பணம், பொருள்களை துஷ்டர்களிடம் இழக்கின்றார்கள்.

நல்வாழ்வு கெட்டவர்களுக்குப் பிடிக்காது. குற்றச்செயல்களை தங்களின் நிரந்தர தொழிலாகக் கொண்டவர்கள், திருந்துவது இல்லை. முற்காலத்தில் அரசர்கள், திருடர்களை எத்தர்களை மன்னிப்பதில்லை. பெரும் தண்டனை வழங்குவார்கள். உலக அமைதி தீயோர்களை களைவதில் தங்கியுள்ளது.

நன்றி: பருத்தியூர் பால- வைரவநாதன்

# யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை குறித்த இரு விடயங்கள்!

புருஜோத்தமன் தங்கமயில்
SH விடயம் ஒன்று,



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை கற்கைநெறிகள் ஆங்கில மொழி மூலம் இடம்பெற்று வருவது தொடர்பில் சில தரப்புக்கள் எதிர்ப்புக் குரல்களை எழுப்பத் தொடங்கியிருக்கின்றன. ஆங்கில மொழி மூல கற்கைநெறிகள் தொடர்வதால் யாழ். பல்கலைக்கழகம் சிங்கள மாணவர்களின் ஆதிக்கத்தின் கீழ் செல்லும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும், இது தொடருமானால் சிங்கள மயமாக்கல் தமிழர் தாயகத்தில் இன்னும் வேகப்படும் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

சட்டத்துறை கற்கை நெறி (சட்டமாணி), கொழும்பு பல்கலைக்கழகத்திலும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும் மாத்திரமே மும்மொழிகளிலும் முன்னெடுக்கப்படுகின்றன. அது தவிர்ந்து கொழும்பு சட்டக் கல்லூரியில் மும்மொழியில் சட்டப் பயிலுனர் கற்கை (சட்டத்தரணி) இடம்பெற்று வருகின்றது. சட்டக்கல்லூரியில் கூட ஆங்கில மொழிமூலமாக மாத்திரம் கற்கையை முன்னெடுப்பது தொடர்பிலான தீர்மானம் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு, தற்போது அது சில காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. விரைவில், சட்டக்கல்லூரியும் ஆங்கில மொழிமூல கற்கை நெறிக்குள் சென்றுவிடும். அதுதவிர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழகம் தொடங்கி சட்டமாணி கற்கைநெறிகள் பயிற்றுவிக்கப்படும் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் ஆங்கில மொழிமூலமே கற்பிக்கப்படுகின்றன

இவ்வாறான நிலையில், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறையில் ஆங்கிலமொழி மூலம் கற்கைகள் முன்னெடுக்கப்படுவது தொடர்பில் திடீர் எதிர்ப்புக்குரல்கள் எழும் பின்னணி குறித்து ஆராய வேண்டியிருக்கின்றது. யாழ். பல்கலைக்கழகம், தமிழர் அரசியல் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்காற்றியிருக்கின்றது. அப்படியான நிலையில், யாழ். பல்கலைக்கழக கற்கைகள் தமிழ் மொழி மூலத்திலிருந்து ஆங்கிலமொழி மூலத்துக்கு செல்வதால் வெளி மாவட்ட மாணவர்களின் வருகை அதிகரிக்கின்றது. குறிப்பாக, சிங்கள மாணவர்களின் வருகை அதிகரிக்கின்றது. அத்தோடு, சிங்கள விரிவுரையாளர்களும் வருகிறார்கள். இவ்வாறான நிலை, யாழ். பல்கலைக்கழகத்துக்கும் தமிழ்த் தேசிய அரசியலுக்குமான பிணைப்பினை அறுத்துவிடும் என்பது ஒரு சாராரின் கருத்து. இன்னொருபுறம், தேவையற்ற இன முரண்பாடுகள் மாணவர்கள் மத்தியில் வெளித்தரப்புக்களின் உந்துதலினால் எழுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகியிருப்பதாகவும் குற்றச்சாட்டப்படுகின்றன. இதனால்தான், தமிழர் தாயகத்தின் முதன்மை புலமைப்பீடங்களில் ஒன்றான யாழ். பல்கலைக்கழகம் சிங்கள ஆதிக்கத்தின் கீழ் சென்று, அது சிங்கள மயமாக்கலின் இன்னொரு தளமாகிவிடும் என்று எதிர்க்குரல்கள் எழுந்திருக்கின்றன.

வடக்கு கிழக்கில் ஆயுத மோதல்கள் இடம்பெற்ற போது, தென் இலங்கை மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தினை ஒரு தெரிவாகக் கொள்வதில்லை. ஏன், முஸ்லிம் மாணவர்கள் கூட தெரிவாகக் கொள்வதில்லை. அப்படியான சூழலில் தமிழ் மாணவர்களே 98 வீதமாக இருந்தார்கள். ஆனால், ஆயுத மோதல்களுக்குப் பின்னர், யாழ். பல்கலைக்கழகத்தினை தென் இலங்கை மாணவர்களும் தெரிவாகக் கொள்கிறார்கள். வடக்கு கிழக்கு மாணவர்கள் எப்படி கொழும்பு உள்ளிட்ட தென் இலங்கை பல்கலைக்கழகங்களை நோக்கி கற்கைநெறி, வசதி வாய்ப்புக்கள் உள்ளிட்ட காரணங்களுக்காகத் தெரிவு செய்கிறார்களோ, அதுபோலவே தென் இலங்கை மாணவர்களும் யாழ். பல்கலைக்கழகம் நோக்கி வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

அப்படியான நிலையில், தமிழ்ப் புலமைச் சொத்தினை காப்பதற்கு ஆங்கில மொழி அறிவு இன்றியமையாதது. அதிலும் விஞ்ஞான, கணித, முகாமைத்துவ மற்றும் சட்டக் கல்விகள் ஆங்கிலமொழி மூலமாக முன்னெடுக்கப்படுவதன் மூலம், மாணவர்களுக்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்தும். அது, அவர்களின் வேலைக்கான காத்திருப்பை இல்லாமல் செய்யும். புதிய ஆய்வுகளையும், அதற்கான வசதி வாய்ப்புக்களையும் உலகம் பூராவும் திறக்கும். இல்லையென்றால், வடக்கு கிழக்கு தாண்டினாலே, தடுமாறும் மாணவர்களைப் பெரும்பான்மையாக உருவாக்கிய வெளித்தள்ளிவிட்டு, வேலையில்லா பட்டதாரிகள் என்கிற பெரும் கூட்டத்தை சமூகத்துக்குள் தள்ளுவதோடு பல்கலைக்கழகத்தின் வேலை முடிந்ததாகிவிடும். அப்படியான வேலையை யாழ். பல்கலைக்கழகம் தொடர்ந்தும் செய்ய வேண்டும் என்பதுதான், ஆங்கில மொழிமூல கற்கை நெறிகளுக்கு எதிராகக் குரல் எழுப்பும் தரப்புக்களின் நோக்கமா என்ற சந்தேகம் வருகின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைக் கல்வியைத் தமிழ் மொழி மூலத்துக்கு மாற்ற வேண்டும் என்று இன்று குரல் எழுப்பும் தரப்புக்கள் முக்கியமான இன்னொரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, வடக்கு கிழக்கில் தமிழ்ச் சட்டத்தரணிகள் நூற்றுக்கணக்கில் இருக்கிறார்கள். ஆனால், அவர்களில் எத்தனை பேர், மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் உயர்நீதிமன்றத்திலும் வாதிடும் திறனோடு இருக்கிறார்கள் என்ற கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கின்றது. ஏனெனில், நீதித்துறையில் உயர் பீடங்களில் ஆங்கிலமொழியிலேயே வாதப்பிரதிவாதங்கள் பெரும்பாலும் இடம்பெறும். அப்படியான நிலையில், அங்கு வாதிடுவதற்காக வரும் தமிழ் சட்டத்தரணிகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். கனக ஈஸ்வரன், எம்.ஏ.சுமந்திரன், புவிதரன் உள்ளிட்ட சிலரையே காணக்கூடியதாக இருக்கும். அவர்களிலும் பெரும்பாலானவர்கள் கொழும்பில் தங்களின் ஆரம்பக் கல்வி முதல் சட்டக்கல்வி வரை முன்னெடுத்தவர்கள்.

ஆங்கிலம் என்பது மொழி மாத்திரமே என்பது சரியானதுதான், ஆனால், அது உலகம் பூராவும் இன்றைக்குப் புரிந்து கொள்ளக்கூடிய மொழிக் கருவியாகிவிட்டது. அப்படியான நிலையில், அதன் அவசியம் தவிர்க்க முடியாதது. அப்படியான நிலையில், யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையைத் தமிழ் மொழி மூலத்திற்கு மாற்ற வேண்டும் என்கிற கோரிக்கை, குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுவதற்கான வாய்ப்புக்களைத் திறப்பதற்கான ஏற்பாடுகளில் போக்கிலானதாகும். தமிழ்த் தேசிய அரசியலைக் காப்பாற்றுவது என்பது, தமிழ் மக்கள் தனிமைப்பட்டுப்போவதல்ல. உலக ஒழுங்கைப் புரிந்து, போட்டி போட்டு எமது அரசியலையும் விடுதலையும் பேசுதலாகும். அதற்கு, ஆங்கில மொழி அறிவும், அதன் மூலமான உயர் கற்கை நெறிகளும் அவசியமாகும். அதற்கு எதிராக யார் குரல் எழுப்பினாலும் அவர்களின் பின்னணிகள் குறித்து கவனமாக இருக்க வேண்டும்.

விடயம் இரண்டு,

யாழ். பல்கலைக்கழக சட்டத்துறையில் சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கத்தின் விருந்தினர் விரிவுரை இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் இந்தப் பத்தியாளர் கடந்த வாரம் எழுதியிருந்தார். அதில், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை உள்ளடங்கும் கலைப்பீடமும் பல்கலைக்கழக நிர்வாகமும் முறையான தீர்மானங்களை எடுக்கவில்லை என்று விமர்சித்திருந்தார். அத்தோடு, சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கத்தின் விரிவுரையை 'தடுத்து நிறுத்தியமை' தவறு என்றும் வாதிட்டிருந்தார்.

கடந்த வாரம் அந்தப் பத்தி வெளியானதும், யாழ். பல்கலைக்கழக முக்கியஸ்தர் ஒருவர் இந்தப் பத்தியாளரை தொடர்பு கொண்டு சில விடயங்களைத் தெளிவுபடுத்தினார். அவர் தன்னுடைய பெயரை பொது வெளியில் அடையாளப்படுத்துவதை விரும்பவில்லை என்பதால் அது தவிர்க்கப்படுகின்றது. ஆனால், சுவஸ்திகா அருளிங்கத்தின் விரிவுரை ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பிலான விடயங்களில் முக்கிய பங்காற்றியவர் அவர்.

அவரின் விளக்கத்தின் சில பகுதிகள் கீழ் கண்டவாறு அமைந்தன, "... சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கத்தின் விரிவுரையைத் தடுத்து நிறுத்தும் எந்த எண்ணமும் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு கிடையாது. சட்டத்துறை தலைவர், கலைப்பீட பீடாதிபதி, துணை வேந்தர் உள்ளிட்ட அனைவரிடத்திலும் சுவஸ்திக்காவின் விரிவுரையை நடத்தும் எண்ணமே இருந்தது. ஆனால், சுவஸ்திகா விடுதலைப் புலிகள் தொடர்பில் வெளியிட்ட கருத்து ஒன்று தொடர்பில் மாணவர்கள் கோபத்தில் இருந்தார்கள். அவர்களைக் கட்டுப்படுத்தும் நிலைக்குள் அவர்கள் இல்லை. பல்கலைக்கழக நிர்வாகத்தினர் மாணவர்களோடு பலமுறை பேசியும் அதனை அவர்கள் கேட்கும் நிலையில் இல்லை. அவர்கள் குழும மனநிலையின் உச்சத்தில் இருந்தார்கள். அப்படியான நிலையில், சட்டத்தரணி சுவஸ்திகாவின் விரிவுரையை நிகழ்த்துவது முடியாமல் போனது. ஏனெனில், அவ்வாறு விரிவுரை இடம்பெற்று அது ஏதாவது அசம்பாவிதங்களைத் தோற்றுவித்தால் அது பல்கலைக்கழகத்துக்கு அவப்பெயரை ஏற்படுத்தும். அதனாலேயே, விரிவுரையை ஒத்திவைக்கும் முடிவு எடுக்கப்பட்டது. ஒருபோதும், விரிவுரை தடுத்து நிறுத்தப்படவில்லை..." என்றார்.

யாழ். பல்கலைக்கழகம் அனைத்து கருத்துக்களையும் விவாதிக்கும் எதிர்கொள்ளும் மாணவர்களை உருவாக்க வேண்டும். அது, ஒற்றைப்புள்ளியில் நின்று விவாதிக்கும் தரப்புக்களின் கூடாரமாகிவிடக்கூடாது. அதனை மாணவர்கள் மத்தியில் புகட்டி, அடுத்த தலைமுறையை ஆரோக்கியமானதாக மாற்ற வேண்டிய பொறுப்பு புலமைப்பீடமாக யாழ். பல்கலைக்கழகத்துக்கு உண்டு. அதனை உருவாக்கும் வாய்ப்புக்கள் எவ்வாறான அச்சுறுத்தல் தொனியில் மறுக்கப்பட்டாலும் அதனைக் கடந்து வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அவசியமாகும். அதனை நோக்கி, ஆசிரியர்களும் நிர்வாகிகளும் மாணவர்களை வழிப்படுத்த வேண்டும்.

## கழிதங்கள்

### மழை நீர் தேக்கம்: மக்கள் பெரும் அவதி

நாட்டில் நிலவும் காலநிலை, இன்னும் சில நாட்களுக்கு நீடிக்குமென அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மாலை வேளைகளில் மழை வெளுத்து வாங்குகின்றது. மலையக பிரதேசங்களில் ஆங்காங்கே மண்சரிவுகள் ஏற்பட்டு, போக்குவரத்து நெரிசல்களும் ஏற்படுகின்றன.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட கொழும்பு மற்றும் தாழ்நில பிரதேசங்களில், வெள்ளநீர் தேங்கி நிற்கின்றது. இதனால், மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். வெள்ளநீர் வடிந்தோடிய பிறகும், பல்வேறான தொற்றுநோய்கள் ஏற்படுவதற்கான அபாய நிலை காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பருவமழை பெய்ய ஆரம்பித்திருப்பதால் காத்தான்குடி நகரசபை பிரிவில் பல உள்வீதிகள் மழை நீரில் மூழ்கியுள்ளன.

ஏற்கெனவே புனரமைக்கப் படாது குண்டும் குழியுமாக காணப்படும் குறித்த வீதிகளில் மழை நீர் தேங்கியுள்ளதால் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் போக்குவரத்து செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மிக நீண்ட காலமாக இவ்வீதிகள் இவ்வாறான நிலையிலேயே காணப்படுவதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். ஆகையால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனத்தை செலுத்தி, தேவையான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- ரீ.எல்.ஜவ்பர்கான்





# அப்பா வருவாரோ?



சி.கஜானா,
குரு/நிக/அல்/இல்மியா மகா வித்தியாலயம் (ஆசிரியர்)

அந்த அர்த்தசாமப் பொழுதில் புதுக்குடியிருப்புக் கிராமம் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது. அமலாவின் கண்கள் மட்டும் தூங்கமறுத்தன. மனம் சஞ்சலப்பட அவள் அமர்ந்திருந்தாள். அவளருகே அவளது செல்ல மகன் கதிர் நித்திரையில் ஆழ்ந்திருந்தான். நாளை நடைபெறவுள்ள முன்பள்ளி மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் கதிருக்கும் கலந்துகொள்ள அழைப்பு வந்திருக்கின்றது. நாளையும் விடிந்தவுடன் அவன் வழமைபோல் ‘அப்பா எங்கே...? அப்பா எப்ப வருவார்?... என்ற கேள்விகளைக் கேட்பான். அமலாவும் வழைமைபோல் பதிலைக் கூறத் திண்டாடுவாள். இவ்வாறு தனது இயலாத தன்மையை எண்ணித் தவித்தக் கொண்ட அமலாவின் மனதில் கடந்தகால நினைவலைகள் அலைமோதத் தொடங்கின.

சேகர் - அமலா திருமணம் பெற்றோர், பெரியோர் ஆசியுடன் இனிதே நடந்தேறியது. அன்பும் ஒற்றுமையும் துலங்க வாழத் தொடங்கிய அவர்களின் வாழ்க்கையில் குழந்தை இல்லை எனும் குறைதான் பல வருடங்களாக அவளை வாட்டியது. கோயில் குளம் சென்று தமக்குக் குழந்தை பிறக்க வேண்டுமென்று வழிபட்டார்கள். ஆண்டவன் திருவருளால் திருமணமாகி ஏழு வருடங்களின் பின்னர் அமலா கர்ப்பமானாள். இதனால் மட்டற்ற மகிழ்ச்சியடைந்த சேகர், அன்று முதல் அமலாவை அக்கறையோடு பார்த்துக் கொண்டான். அவள் விரும்பியவற்றையெல்லாம் வாங்கிக் கொடுத்தான். தனது இறைவழிபாட்டின் பிரதிபலன் இதுவென்று இவரும் இறைவனுக்கு நன்றி கூறினர்.

யுத்தமேகம் வன்னிப் பெருநிலப்பரப்பைச் சூழ்ந்துகொண்ட காலப்பகுதி அது. தமது உயிருக்குப் பயந்து மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றனர். சேகரும் மக்களோடு மக்களாக முள்ளிவாய்க்காலில் குடிசை அமைத்துத் தங்கினார். நிறைமாதக் கற்பிணியான அமலாவைப் பாதுகாத்துவிட வேண்டும் என்பதில் சேகர் கவனம் செலுத்தினான்.

உணவுப் பஞ்சம் தலை விரித்தாடியது. மக்கள் ஒருநேர உணவுக்கும் படாதபாடுபட்டனர். குழந்தைகள் பசிக் கொடுமையால் வாடினர். பெற்றோர், பிள்ளைகளின் பசியைப் போக்க முடியாமல் திண்டாடினர். அமலாவின் பசிபோக்க எண்ணிய சேகர் யாதாயினும் உணவுப்பொருள் கிடைக்காதா? என்று தேடிச்சென்றான். போகும் போது, ‘அமலா கவனமாக இருந்துகொள்!... ஏதாவது சாப்பிடத் தேடிக் கொண்டு வாறன். கவனம்....’ எனக் கண்கள் கலங்க விடை பெற்றான் சேகர்.

‘ஓம்... நீங்களும் கவனமாய் போய் வாருங்கோ...’ என வழியனுப்பி வைத்தாள் விமலா.



விவசாய நிலங்களைக் கைவிட்டு கிளிநொச்சியிலிருந்து இடம்பெயரும் மக்கள் - 2009

Image Source - wikipedia.org

இறுதியாக விடைபெற்றுக் கொள்கின்றோம் என்பதை அப்போது அந்த இரு அன்புள்ளங்களும் நினைத்திருக்க நியாயமில்லை. சேகர் சென்று சற்று நேரமளவில் பல இடங்களில் வெடிகுண்டுகள் வந்து வீழ்ந்து வெடித்துச் சிதறின. எங்கும் புகைமண்டலம், அவலக் குரல், ஐயோ... அம்மா... ஆ... என்னும் கூக்குரல் அமலாவிற்குப் பயம் தொற்றிக் கொண்டது. வெளியே சென்ற தனது கணவனுக்கு என்ன நடக்குமோ? என ஏங்கினாள். ‘கடவுளே என்ரை புருசனைக் காப்பாற்றிக்கொடு...’ எனத் தொடர்ந்து பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். திடீரென ஒரு வெடிகுண்டு அமலா அமர்ந்திருந்த குடிசைக்கு அருகில் வீழ்ந்து வெடித்தச் சிதறியது. குண்டுச் சிதறல்கள். அமலாவின் உடலைத் தாக்கவே, இரத்தம் பீறிட, ‘ஐயோ... அம்மா...’ என அலறியபடி மண்ணில் சாய்ந்தாள் அவள்.

அமலா மயக்கம் தெளிந்து கண்களை மெல்லத் திறந்தாள். வேறு ஒரு உலகத்தில் இருக்கிறோமே என எண்ணத் தோன்றியது அவளுக்கு. முள்ளியவாய்க்காலில் வாழ்ந்த சூழலை விட முற்றிலும் மாறுபட்ட இடத்தில், தான் படுத்திருப்பதைச் சற்று நேரத்திற்கெல்லாம் அவளால் உணர முடிந்தது. ஆம், அது வைத்தியசாலை! காயப்பட்டவர்கள் பலரும் படுத்திருந்தனர். ‘ஆ... ஐயோ... அம்மா...’ அவள் அப்போதுதான் வேதனையை உணர்ந்தாள். அவளது உடலின் பல இடங்களில் காயங்களுக்கு மருந்து கட்டப்பட்டிருந்தது.

‘...ஐயோ... அம்மா... நான்... எங்கை... இருக்கிறன்?... என்ரை... சேகர்... எங்கை...?

என அமலாவின் குரல் கேட்டு அங்கே நின்ற மருத்துவத்தாதி ஒருத்தி அமலா அருகே வந்தாள்.

‘அக்கா... நான்... எங்கை... இருக்கிறன்? இது... எந்த இடம்?... என்ரை... சேகர்... எங்கே?...

அமலா மனம் வெலவெலத்துப் போய்க் கேட்டாள்.’

‘இது புல்மோட்டைக் கொஸ்பிற்றல்... முள்ளிவாய்க்காலில காயப்பட்டவளை இஞ்சைதான் கொண்டு வந்திருக்கினம். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்கத் தேவையில்லை. இஞ்சை எல்லா வசதிகளும் செய்து தருவினம். உங்கடை பெயர் விபரம் பதிய வேணும்... ம்...’ கூறிவிட்டு தாதி சென்று விட்டாள்.

அமலா சுற்று முற்றும் பார்த்தாள். தனது கணவனையோ, உறவினர்களையோ காணவில்லை.

‘ஆண்டவா... என்ரை சேகரக்கு... என்ன ஆச்சுதோ தெரியேல்லையே... கடவுளே... நீதான் அவரை என்னட்டைக் கொண்டு வந்து சேர்க்கோணும்...’

உடற்காயங்கள் ஒரு புறமும், கணவனையும் சொந்தங்களையும் காணாத கவலை மறுபுறமும், வலியை ஏற்படுத்த, அமலா தேம்பித் தேம்பி அழுதாள்.


அன்றிரவு அமலாவிற்கு பிரசவவலி ஏற்பட்டது. உடனடியாக அவள் பிரசவ வாட்டிற்கு மாற்றப்பட்டாள். இரவு முழுவதும் மனவேதனையும், உடலில் காயங்களால் ஏற்பட்ட வலியும், பிரசவ வலியும் அமலாவை ஆட்டிப் படைத்திருக்க, மறுநாள் விடியற்காலையில் அழகான ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். மயக்கமுற்ற அமலா கண்விழித்ததும் மருத்துவ தாதியர் குழந்தையை அவளிடம் காண்பித்தனர். தனக்கு ஆண்குழந்தை பிறந்ததை அறிந்தது அமலா ஆனந்தமடைந்தாள்.

‘ஆ... என்ரை சேகர் இருந்தால் எவ்வளவு சந்தோசப்பட்டிருப்பார்...’ அமலா விம்மி விம்மி அழுதாள். தாதியரும் அருகிலிருந்தவர்களும் அவளுக்கு ஆறுதல் கூறினர்.

ஒரு மாதத்தின் பின்னர் அங்கிருந்த மக்களுடன் அமலாவும் குழந்தையும் செட்டிகுளம் நலன்புரி முகாமிற்கு அனுப்பப்பட்டனர். அங்கு அமலா தனது பிள்ளையை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற மனத்திடத்துடன் குழந்தைக்கு கதிர் எனப் பெயரிட்டு வளர்த்தாள். சேகருக்கு என்ன நடந்திருக்கும் என்பதை அறியாத அமலா, அறிந்தவர் தெரிந்தவர்களிடம் கணவனைப் பற்றி விசாரித்தாள். பலன் எதுவுமில்லை. வேறு நலன்புரி முகாமிலிருந்து அமலா தங்கியிருந்த முகாமிற்குப் பலர், உறவினர் இணைப்பில் வந்தனர். அவ்வாறு ‘சேகரும் ஒருநாள் வந்துவிடுவார்.’ என அமலா அவ்வப்போது தனது மனதைத் தேற்றிக் கொள்வாள்.

காலச்சக்கரம் சுழன்றோட வன்னியில் மீள்குடியேற்றம் நிகழ்ந்தது. அமலா தனது செல்லக்குழந்தை கதிருடன், சொந்த ஊருக்கு வந்தாள். யுத்த வடுக்களில் நடுவே மனவடுக்களையும் சுமந்தவளாய் அமலா தனது காணியில் காலடி எடுத்து வைத்தாள். அவ்வேளையில் சேகர் பற்றிய நினைவு வரவே சற்றுநேரம் அழுது தீர்த்தாள்.

குடிசை, தற்காலிகவீடு அரசவீட்டுத் திட்டம் ஒவ்வொன்றாய் வந்து சேர்ந்தன. சேகர் மட்டும் வரவேயில்லை.



# புலர்வு



றொசில்டா அன்
திருகோணமலை

பேருந்து பயணம் என்றாலே எனக்கு அலர்ஜி, காரணம் நீண்ட நேரம் ஒரே இடத்தில் இருப்பதாலோ தெரியவில்லை. யாழில் இருக்கும் எனது கணவரின் வீட்டிலிருந்து திருமலையிலுள்ள எனது வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். மாதத்திற்கு ஒரு தடவையேனும் இவ்வாறாக பயணப்பட வேண்டிய நிலை,

என்னதான் பயணம் நமக்கு சரிவராது என்று வாயால் சொன்னாலும் அதிலும் ரசனையொன்று உள்ளது என்பது உண்மையே! சாளரம் ஊடாக நான் வெளியே நகரும் அனைத்தையும் அவதானிப்பதிலும் ரசிக்கவும் தவறுவதிவல்லை. எப்போதும்பயணத்தின் போது சாளரப் பக்கமாகவே எனது இருக்கையை பிடித்துக்கொள்வேன். காரணம் நான் பயணப்படும் நீளம் முழுவதும் அங்குலம் அங்குலமாக விரிந்து கிடக்கும் அழகை காணவே.. அழகிய பச்சை பசேல் என காடு, மரங்கள், வயல்கள், தோட்டங்கள், ஆடுகள், மாடுகள்.. நகரும் மனிதர்கள் என அழகிய காட்சிகள் என் கண் முன்னே. வாகனங்களின் புகை வேறு, வாந்தி வருவது போல குமட்டல் வருவதுண்டு.

போட்டி போட்டு ஓடும் வாகனங்கள் என பய உணர்வுடனே பயணம் செய்ய வேண்டிய நிலை....

யாழ். நல்லூர் கந்தனின் திருவிழாவிற்கு சென்று வரும் மக்களின் வருகை பேருந்தின் நெரிசலில் கண்டேன். நல்லூர் கந்தனை தரிசிப்பதற்கு தூர இடங்களில் இருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வந்ததை அவ்வளவு சன நெரிசல் உணர்த்தியது. முன் ஆசனத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் ஆடல், பாடல் என்று ஏதோ சுற்றுலா செல்லும் நினைவுடன் ஆர்ப்பாட்டமாக பாடலும் கைதட்டலுமாக பயணித்தார்கள்..

எனது அருகிலுள்ள ஆசனத்தில் வவுனியா செல்வதற்காக வந்த அம்மா எனதருகில் அமர்ந்தார்,

குடும்பத்துடன் வந்திருந்தார்கள்.

இருவரும் சிறிது நேரத்திலேயே நட்புடன் கதைத்துக்கொண்டே வந்தோம். நல்லூர் கந்தனின் அருளால் இந்த வருடம் திருவிழா கண்டதாக கூறினார்கள் தலையில் மல்லிகை பூக்களுடன் பாவாடை தாவணி என அம்மாவுடன் வந்த மகள் பேத்தியார் அழகாய் கலக்கலாய் இருந்தார்கள். பர்தா அணிந்த இரண்டு பெண்கள் கைக் குழந்தைகளுடன் பின் இருக்கையில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். குழந்தைகளுக்கு பசியோ தெரியவில்லை, பால் கொடுக்கவும் முடியாத நெரிசல் மிக்க பேருந்து இடைவெளியற்று மூச்சு விடவும் முடியவில்லை. என்னருகலிருந்த அம்மா, மகள், பேத்தியார் இறங்க வேண்டிய இடம் வவுனியா வந்ததும் ‘போட்டு வாரன் மகள்’ என்று கூறிவிட்டு இறங்கிக்கொண்டார்கள். நானும் பதிலுக்கு தலையசைத்துக் கொண்டேன்.

எனக்கு பயணம் போகும் போது நித்திரையே வராது. அந்த அம்மா இறங்கியதும் எனது அருகிலிருந்த ஆசனம் வெறுமையாக இருந்ததைக் கண்ட சகோதரி ஒருவர் அத்தனை பேரையும் தள்ளிக்கொண்டு எனதருகில் வந்தமர்ந்து கொண்டார். அவருடன் இன்னுமொரு சகோதரியும் வந்திருந்தார். அவரும் முன்பக்க இருக்கையில் முன்டியடித்து அமர்ந்துக் கொண்டார் இருவருக்கும் அவ்வளவு களைப்போ தெரியவில்லை. இருவரும் உடன் பிறந்தவர்கள். முன் பக்க ஆசனத்தில் இருந்த பல்கலைக்கழக மாணவர்களின் சிரிப்பொலியுடன் கூடிய ஆடலும், பாடலும் காதை அடைக்கும் சத்தம்.

தலைவலி தாங்க முடியாதிருந்தது மூச்சும் எடுக்க சிரமமாய் இருந்தது காரணம் பேருந்து பயணம் தொடர தொடர சன நெரிசல் கூடிக்கொண்டே சென்றது. மறுபக்கம் இறக்கம் வருமிடத்தில் வடை விற்கும் வியாபாரி ‘வடை வடை எடம்மா பத்து நூறு ரூபா தானம்மா’ என்று கூவியப்படி வந்தார் சரி நம்மட வாயும், வயிறும் கேட்குமா பசி ருசி என்று நூறு ரூபாயை நீட்டினன் ‘இந்தம்மா வாங்கிக்கோ’ என்றார். நானும் பசி என்பதால் கடதாசி பேக்கில் கை விட்டு வடையை எடுத்து சாப்பிட்டு கொண்டே அந்த சகோதரியை பார்த்து’ வடை சாப்பிடுங்க ‘என்றேன் விரக்தியாக வேண்டாம் என்ற அந்த சகோதரியை ஏன் என்பது போல பார்த்தேன். நம் பயணம் தொடர வவுனியாவைக் கடந்து சென்றது பேருந்து எனதருகில் இருந்த சகோதரி முன் இருக்கையில் இருந்த பல்கலைக்கழக மாணவர்களின் பாட்டு கூத்து சிரிப்புக்களை பெருமூச்சு விட்டு கொண்டே ‘என்ன ஒரு இங்கிதம் தெரியாத பிள்ளைகளோ’ என்று சலித்துக்கொண்டார்.

ஏதோ ஒரு கவலை அவரிடத்தில் எப்படி ஆரம்பித்து கதைப்பது என்று யோசித்தேன்.

சிறிது நேரத்தில் நான் அந்த சகோதரியிடம் கதை கொடுத்தேன். ‘எங்கிருந்து வாரிங்க’ ‘வாவுனியாவிலிருந்து விடுமுறைக்காக வீட்ட போறன் அக்காச்சி’ தங்கச்சி வவுனியாவில சித்தி வீட்ட நிண்டவ எனக்கு விடுமுறை என்றுதும் அம்மாவை பார்க்க போறம்’

சமுர்த்தி வேலையில் பயிற்சிக்காக சென்று வருவதை அவருடன் பேசும்போது போது அறிந்துகொண்டேன்.

அப்பா கலவரத்தில் இறந்து விட்டார், அம்மா, தங்கை, நான் இதுதான் எனது குடும்பம் என்று தனது குடும்ப சூழ்நிலை பற்றியும், தனது தங்கைக்கு கல்விக்காகவே தான் கஸ்டப்படுவதாகவும் கவலையுடன் கூறினார்.

ஆனால், இன்று சில பிள்ளைகள் கஸ்டங்கள் தெரியாமல் இப்படியாக கூத்தடிக்கின்றார்கள். இவர்களின் காலடிக்கே எல்லா வசதிகளும் கொட்டிக் கிடைப்பதால் கவலையறியாது வாழ்கின்றார்கள் என்று சொல்வதைக் கேட்கவே எனக்கும் பல சிந்தனைகள் அந்நேரத்தில்.........

மூதூர் கிளிவெட்டி தான் அவர்களின் சொந்த இடம். அப்பா யுத்தகால பகுதியில் கொலை செய்யப்பட்ட போது தாய் இரண்டு குழந்தைகளுடன் இடம்பெயர்ந்தார். ‘அம்மாட முயற்சியால தான் அக்காச்சி நான் படிச்சன் இப்ப அம்மா ரொம்ப நோய்வாய்ப்பட்டுட்டாங்க நான் தங்கச்சிய படிக்க வைக்கனும்’

யுத்தம் முடிவுற்ற போதும் அதன் காயம் தொடர்கதையே! பத்து வருடம் கடந்த போதும் எத்தனை குடும்பங்கள் நிர்கதியாய், அவள் மனதில் எத்தனை ஏக்கங்கள், தலைவன் இல்லாத வீட்டில் பிஞ்சுகளின் நிலையை சிந்தித்தவளாய்...

அப்போதே நான் எடுத்த இறுதி முடிவாக இச்சகோதரியின் படிப்பிற்கு உதவதற்கு முடிவு செய்தேன். ‘உங்கள் தங்கையின் படிப்பிற்கு நான் உதவலாமா?’ ஆம் என்பதை போல கண்களால் வியந்தவளாய்! நன்றியுணர்வுடனும் மலர்ந்த புன்னகையுடனும் அவர்கள் இருவரையும் பார்த்து நானும் ஆனந்தமடைந்தேன். கல்வி என்னும் வேருக்கு நாம் ஊற்றும் நீர் பெரு விருட்சமாகி அவர்களை காக்கும் என்பது நான் அனுபவபூர்வமாக உணர்ந்தது.

அவர்களுடைய தொலை பேசி இலக்கத்தை வாங்கி கொண்டேன். எனது இறங்கும் இடமும் வர அவர்கள் விழிகளில் தெரிந்த கேள்வியை உணர்ந்தவளாக அவர்கள் கரங்களை பற்றி அழுத்தமாக என்னை நம்புங்கள் என உணர்த்தினேன் இப்போது அந்த சகோதரியின் முகத்தில் அத்தனை பிரகாசம்.

அவர் பேருந்தில் ஏறிய போது முகத்தில் இருந்த கவலை நீங்கி நான் இறங்கும் போது தனது தங்கையின் எதிர்காலம் இனி வசந்தமே என்ற கூறுவதை போல இருந்தது...

நானும் உற்சாகமாக என் வீடுநோக்கி நடக்கலானேன்..


புதுடெல்லி

# லஷ்கர் இ தொய்பா அமைப்புக்கு தடை

லஷ்கர்-இ-தொய்பா அமைப்பு 2008ஆம் ஆண்டில் மும்பையில் நடத்திய தாக்குதலில் இஸ்ரேல் நாட்டவர் உட்பட 175 பேர் கொல்லப்பட்டனர். இதன் 15ஆவது ஆண்டு நினைவுதினம் வரவுள்ள நிலையில், புதுடெல்லியில் உள்ள இஸ்ரேல் தூதரகம் செவ்வாய்க்கிழமை (21) வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

கடந்த 2008 நவம்பரில் லஷ்கர் இ தொய்பா அமைப்பால் நடத்தப்பட்ட பயங்கரத் தாக்குதல் மற்றும் அதன் கொடூரமான நடவடிக்கைகள், அமைதியை நாடும் நாடுகள் மற்றும் சமூகங்களில் இன்னும் எதிரொலிக்கின்றன.

லஷ்கர் இ தொய்பா தடைசெய்யுங்கள் என்று இந்தியாவின் தரப்பில் கோரிக்கை வரவில்லையென்றாலும், அதை நாங்களாகவே தடை



செய்துள்ளோம். தீவிரவாதத்தை வேரறுக்க உலக நாடுகளுடன் இணைந்து இஸ்ரேல் எப்போதும் போரிடும் என தெரிவித்துள்ளது.



சென்னை

## 2 ஆண்டுகளில் சந்திரயான்-4 ஏவப்படும்

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் இஸ்ரோ தயாரித்து அனுப்பிய "சந்திரயான்-3" விண்கலத்தின் 'விக்ரம்' லேண்டர் கடந்த ஒகஸ்ட் 23ஆம் திகதி வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது.

அடுத்த கட்டமாக ஜப்பானுடன் சேர்ந்து "சந்திரயான்-4" திட்டத்தைச் செயல்படுத்த இந்தியா முடிவு செய்துள்ளது. "சந்திரயான்-4" திட்டம் "லூபெக்ஸ்" எனும் பெயரில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் ரோபோட் தொழில் நுட்பத்திலான ரோவர் மற்றும் லேண்டரை நிலவுக்கு அனுப்பி ஆய்வு செய்வதுடன், அதன் மேற்பரப்பில் உள்ள மாதிரிகளை சேகரித்து பூமிக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட உள்ளதாக தகவல்கள் வெளயாகியுள்ளன.

அடுத்த 2 ஆண்டுகளுக்குள் இந்த திட்டத்துக்கான முதற்கட்ட சோதனையை நடத்தி முடிக்க இலக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் நிலவின் இருள் நிறைந்த தென்துருவப் பகுதிகளை முழுமையாக ஆராய்வதே "சந்திரயான்-4" திட்டத்தின் நோக்கம் எனவும் இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



உத்தர தேசம்

## அர்ச்சகர் பணிக்கு 3,000 பேர் விண்ணப்பம்

உத்தர பிரதேசம் மாநிலம் அயோத்தியில் கட்டப்பட்டு வரும் ராமர் கோயில் எதிர்வரும் ஜனவரி மாதம் திறக்கப்படவுள்ளது. இதில் அர்ச்சகர்களாக பணியாற்றுவதற்கான விளம்பரத்தை ஸ்ரீ ராம ஜன்மபூமி தீர்த் ஷேத்ரா அறக்கட்டளை சமீபத்தில் வெளியிட்டது. இதையடுத்து ராமர்கோயில் அர்ச்சகர்கள் பணிக்கு சுமார் 3,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இதுகுறித்து ராமர் கோயில் அறக்கட்டளை பொருளாளர் கோவிந்த தேவ் கிரி கூறும்போது, "விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 200 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இறுதியில் 20 பேர் தேர்வு செய்யப்பட்டு, 6 மாத பயிற்சிக்குப்பின் ராமர் கோயில் அர்ச்சகர்களாக பல பதவிகளில் நியமிக்கப்படவுள்ளனர்" என்றார்.

இஸ்ரேல்

# "போர் நிறுத்தத்துக்கு பிறகு போர் முடிவடையாது"

ஹமாஸ் - இஸ்ரேல் இடையே கடந்த மாதம் 7ஆம் திகதியில் இருந்து போர் நடைபெற்று வருகிறது. இதனிடையே ஹமாஸ்-இஸ்ரேல் இடையே நான்கு நாட்கள் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், போர் நிறுத்தத்திற்கு பிறகு ஹமாஸ்க்கு எதிராக போர் நிறுத்தப்படாது என இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் கூறும்போது, "நாங்கள் போரில் இருக்கிறோம். போரை தொடருவோம். எங்களுடைய அனைத்து இலக்குகளையும் அடையும் வரை போர் தொடரும்.

போர் நிறுத்த நேரத்தில் உளவுத்துறை முயற்சிகள் பராமரிக்கப்படும், இது இராணுவத்தை அடுத்த கட்ட போருக்கு தயார்படுத்த அனுமதிக்கும். காஸா, இஸ்ரேலை அச்சுறுத்தும் வரை போர் தொடரும்" என தெரிவித்துள்ளார்.



## "எக்ஸின் மூலம் கிடைக்கும் வருமானம் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும்"

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் ஒரு மாதத்திற்கும் மேலாக தொடர்ந்து நீடித்து வரும் நிலையில், 4 நாட்கள் போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் முன்வந்துள்ளது.

இந்த போரில் இதுவரை 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர். 2,700 பேர் காணாமல் போயுள்ளனர். இஸ்ரேலில் 1,200 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், எக்ஸ் நிறுவனத்தின் தலைவரான எலான் மஸ்க், எக்ஸ் "வலைதளத்தின் விளம்பரம் மற்றும் சந்தாதாரர்கள் மூலம் கிடைக்கும் வருமானம், போரில் பாதிக்கப்பட்ட மருத்துவமனைகளை சீரமைக்கவும், காசாவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காகவும் நன்கொடையாக வழங்கப்படும்" எனத் தெரிவித்துள்ளார்.



இஸ்ரேல்

## நான்கு நாட்கள் போர் நிறுத்தத்துக்கு ஒப்புதல்

ஹமாஸ் - இஸ்ரேல் இடையே 46 நாட்களாக போர் நடைபெற்று வருகிறது. இதனால் காசாவில் உள்ள பொதுமக்கள் மனிதாபிமான உதவி கிடைக்காமல் அவதிப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கு உதவி கிடைக்க உலக நாடுகள் முயற்சி மேற்கொண்டன. குறிப்பாக அமெரிக்கா உதவியுடன் கத்தார் போர் நிறுத்தம் ஒப்பந்தம் செய்ய மத்தியஸ்தரராக செயல்பட்டு வந்தது.

கத்தார் இருதரப்பிலும் பிணைக்கைதிகள்- இஸ்ரேல் சிறையில் உள்ள பலஸ்தீனர்கள் விடுதலை செய்ய பேச்சுவார்த்தை நடத்தி வந்தது. இதனால் ஹமாஸ் அமைப்பினர் தாங்கள் பிடித்து வைத்துள்ள 240 பிணைக்கைதிகளில் 50 பேரை விடுதலை செய்ய சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இதனால் இஸ்ரேல் அமைச்சரவை நான்கு நாட்கள் போர் நிறுத்தம் செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது.



### உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:


# பிரேஸிலை வென்ற ஆர்ஜென்டீனா

தென் அமெரிக்க கால்பந்தாட்ட சம்மேளன உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில், பிரேஸிலில் நேற்றுக் காலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான ஆர்ஜென்டீனா வென்றது.

ஆர்ஜென்டீனா சார்பாகப் பெறப்பட்ட கோலை நிக்கலஸ் ஒட்டமென்டி பெற்றிருந்தார்.

இதேவேளை, ஈக்குவடோரில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் சிலி தோற்றது.

இந்நிலையில், ஆபிரிக்க கால்பந்தாட்ட சம்மேளன தகுதிகாண் போட்டிகளில், கொமரூஸ் தீவுகளில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் கானா தோற்றது.



75 வயதிலும் வெறும் காலுடன் ஓடி முல்லைத்தீவு அகிலத்திருநாயகி

## சர்வதேச சாதனை

■ அஸ்ஹர் இப்றாஹீம்

பிலிப்பைன்ஸில் அண்மையில் நடைபெற்ற தேசிய மாஸ்டர்ஸ், சிரேஷ்ட தடகள வீரர்கள் விளையாட்டுப் போட்டியில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட முள்ளியவளை, முல்லைத்தீவைச் சேர்ந்த அகிலத்திருநாயகி (ஓய்வு பெற்ற சிறைச்சாலைகள் உத்தியோகத்தர்) இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

1,500 மீற்றர் நெடுந்தூர ஓட்டம், 5,000 மீற்றர் நெடுந்தூர விரைவு நடை ஆகிய போட்டிகளில் முதலிடம்பெற்று தங்கப் பதக்கங்களையும், 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், 5,000 மீற்றர் நெடுந்தூர ஓட்டத்தில் நான்காமிடத்தையும் அகிலத்திருநாயகி பெற்றுக் கொண்டுள்ளார்.

## செவி புலனற்ற கிரிக்கெட் அணிக்கு உபகரணங்கள்



■ சிவாணி ஸ்ரீ

காதுகேளாதோர் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு- 20 உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கையணிக்குத் தேவையான கிரிக்கெட் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வானது, ஸ்ரீலங்கா கிரிக்கெட் அறக்கட்டளையின் தலைவரும் சப்ரகமுவ மாகாண ஆளுநருமாகிய நவின் திசாநாயக்கவின் தலைமையில் அறக்கட்டளையின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.



## இந்திய - ஆஸி மீண்டும் மோதல்

இந்தியாவும், அவுஸ்திரேலியாவும் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மோதிய மூன்று நாள்களில், விசாகப்பட்டினத்தில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் மோதவுள்ளன.

அடுத்தாண்டு சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரானது இடம்பெறவுள்ள நிலையில், அதற்கான தயார்படுத்தலுக்கான ஆரம்பப் புள்ளியாக ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடர் அமைகின்றது.

அவுஸ்திரேலியாவில் பற் கமின்ஸ், ஜொஷ் ஹேசில்வூட், மிற்செல் ஸ்டார்க், மிற்செல் மார்ஷ், டேவிட் வோர்னர், கமரோன் கிறீன் உள்ளிட்டோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ள நிலையில் அணியில் இடம்பெற்றுள்ள ஸ்டீவன் ஸ்மித் அதிகம் கவனம் பெற்றவராகக் காணப்படுகின்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 23 நவம்பர் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.